DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 107/2022 Crime No. 52/2022 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-2/LW-6- முத்துசாமி | Village | |
| Father Name | குப்புசாமி | Taluk | |
| Age | 55 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 12.08.2024 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஊமாரெட்டியூரில் குடியிருந்து கொண்டு, நான் கார் ஓட்டுநராக உள்ளேன். தேதி மற்றும் மாதம் நினைவில்லை, கடந்த 2-1/2 ஆண்டுகளுக்கு முன்பு அ.சா.1 நீலமேகம் என்பவரது வீட்டின் முன்பாக நிறுத்தியிருந்த அவரது ஸ்கூட்டரை யாரோ திருட முயற்சித்தாகவும், அவர்கள் மீது புகார் அளித்துள்ளதாகவும் கேள்விப்பட்டேன். மறுநாள் நீலமேகம் வீட்டில் திருட முயற்சித்த இருவரும் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் உள்ளதாக தகவல் கிடைத்து நானும், கண்ணன் என்பவரும் அங்கு சென்று பார்த்தபோது ஆஜர் எதிரிகள் இருவரும் அங்கிருந்தார்கள். போலீசார் அவர்களை விசாரித்தபோது தங்களது பெயரையும், முகவரியையும் கூறினார்கள். எதிரி அபிஷேக் தாமாக முன் வந்து மேற்படி திருட முயற்சித்தது தொடர்பாக எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதனை போலீசார் எங்கள் இருவர் முன்னிலையிலும் பதிவு செய்தார்கள். நாங்கள் இருவரும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையெழுத்து செய்தோம். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் எதிரி அபிஷேக்கின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **எதிரி அபிஷேக்கின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பிற்கு போதிய வாய்ப்பளித்து குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 107/2022 Crime No. 52/2022 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1/LW-1- நீலமேகம் | Village | |
| Father Name | கோட்டையண்ணன் | Taluk | |
| Age | 49 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 12.08.2024 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பூதப்பாடியில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை, சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அவர்கள்தான் தனது வீட்டில், தனது வாகனத்தை திருடு முயற்சித்தார்கள் என்று அடையாளம் காட்டினார். கடந்த 15.02.202 ம் தேதியன்று, மதியம் நான், எனது TVS Zest வாகனத்தை எனது வீட்டின் முன்பாக நிறுத்திவிட்டு சென்றுவிட்டேன். பின்னர் மாலை சுமார் 06.30 மணியளவில், வெளியில் நிறுத்தியிருந்த எனது ஸ்கூட்டரை யாரோ எடுப்பதுபோல் சத்தம் கேட்டதால் நான் வெளியே வந்து பார்த்தபோது ஆஜர் எதிரிகள் இருவரும் எனது வாகனத்தை திருட முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். என்னை பார்த்ததும் நான் சத்தம் போடவே அங்கிருந்து தப்பி ஓட முயன்றனர். அருகில் இருந்தவர்களின் உதவியுடன் நான் ஆஜர் எதிரிகள் இருவரையும் பிடித்து அம்மாபேட்டை காவல் நிலையம் அழைத்து வந்து புகார் அளித்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பிற்கு போதிய வாய்ப்பளித்து குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**